**மாணவர் பங்கேற்புகள்**

13.09.2019 அன்று காரைக்கால் வானொலியத்தில் அன்றாட வாழ்வில் மனிதன் சந்திக்கும் இன்னல்கள் என்ற பொருளில் கணிதத்துறை மாணவர்களின் கலந்துரையாடல், இன்றைய மாணவர்களின் வளர்ச்சிக்கு பெரிதும் துணையாக இருப்பது ஆசிரியர்களா பெற்றோர்களா என்ற பொருண்மையில் அனைத்து துறை மாணவர்களின் கலந்துரையடல், வீரத்தமிழ் மங்கை தில்லையாடி வள்ளியம்மை என்ற பொருண்மையில் மாணவி விஷாலினி கணிதம் மூன்றாம் ஆண்டும், உயர்தனிச்செம்மொழி என்ற பொருண்மையில் மாணவி கல்பனா சாவ்லா கணிதம் முதலாமாண்டு, தமிழ் மொழியின் சிறப்பு என்ற பொருண்மையில் ஆசைத்தம்பி ஆங்கிலம் மூன்றாமாண்டு தனிப்பேச்சு நிலம் நீர் காற்று பற்றிய பொருண்மையில் வீ.பீர்வீன் தமிழ் இலக்கியம் மூன்றாம் ஆண்டும் காவிரி என்ற பொருண்மையில் ஆசைத்தம்பி ஆங்கில இலக்கியம் மூன்றாம் ஆண்டு, மணல்குவாரி, கைபேசி ஆகிய பொருண்மையில் ராஜேஸ்வரி வணிகவியல் மூன்றாம் ஆண்டு ஆகிய  மாணவர்களின் கவிதை முதலான நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பப்பட்டன. எம் கல்லூரியின் 27 மாணவர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்ச்சியில் திறன்மிக்க வெளிப்பாடு என்ற அடிப்படையில் ஐந்து மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

**1.எம்.கங்காதேவி கணிதம் மூன்றாம் ஆண்டு**

**2.எஸ். ஆசைத்தம்பி ஆங்கிலம் மூன்றாம் ஆண்டு**

**3.வீ.பீர்வீன் தமிழ் மூன்றாம் ஆண்டு**

**4.கல்பனா சாவ்லா கணிதம் முதலாமாண்டு**

**5.ராஜேஸ்வரி வணிகவியல் முதலாமாண்டு**

ஆகிய மாணவர்களுக்குப் பரிசு தொகையாக ரூபாய் 800ம் அகில இந்திய வானொலிநிலையத்தின் மத்திய அரசு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. காரைக்கால் வானொலி நிலையத்தில் முதல் முறையாக எம் கல்லூரி மாணவர்களுக்கு பரிசு தொகை வழங்கப்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்கது. கல்லூரிக்கு ஊடக அளவில் பெருமை சேர்த்த மாணவ மாணவியர்க்குப் பேரவையின் சார்பில் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் எஸ் ஆசைத்தம்பி ஆங்கிலம் மூன்றாம் ஆண்டு மாணவர் காரைக்கால் வானொலி நிலையத்தால் தொடர் அழைப்புகளைப் பெற்று நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறார்.